**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன்

அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ)**அதிகாரசபையின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 5,267,686 க்கான சுற்றுலா, அபிவிருத்தி நிதியம் சம்பந்தமான வரிப்பணம் திரும்ப செலுத்துகையில் செலுத்த வேண்டிய கணக்கிற்கு பற்று செய்ய வேண்டியதற்கு பதிலாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி வருமானவரி கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டிருந்தது. அதனால் சுற்றுலாத்துறை வரி வருமானம் குறைவாககாட்டப்பட்டுள்ளது. | அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் அதை திருத்துவதற்கான நடவடிக்கைஎடுக்கப்படும். | வருமானம் பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| **(ஆ)** சென்றவருடம் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டியுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தகப்பல் பிரயாண வரி வருமானத்தில் மீளாய்வாண்டில் கணக்கில் விழாத வருமானம் ரூபா 57,842,242 சேர்க்கப்பட்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்வதற்கு பதிலாக கிடைக்க வெண்டிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரிக் கணக்கிற்கு பற்று செய்ததன் பலனாக மீளாய்வாண்டில் பெறவேண்டிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி நிதிக்கூற்றுக்களில் கூடுதலாககாட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றக்கொள்வதுடன் அதை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பேற வேண்டிய வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு முறையாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியமை. |
| **(இ)** 2017 ஆம் ஆண்டில் அங்கிரிக்கப்பட்ட செலவனமாக கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19,740,544 ஏனைய வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | அங்கிகரிக்கப்பட்ட செலவனம் கணக்கிலிடப்படுவது ஏனைய பிரிவுகளால் அனுப்பப்படுகின்ற தகவல்களை அடிப்படையாக வைத்துத்தான். | அதிகாரசபையின் வருமானம் இனங்காணும் கொள்கைக்கு அமைவாக மாத்திரம் வருமானத்தை இனங்காண நடவடிக்கை எடுக்கவேண்டியமை மற்றும் நிதிக்கூற்றுதயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட செலவுக்கான ஒதுக்கீடு சரியாக செய்யவேண்டியமை |
| **(ஈ)** இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு செயலகத்தின் மற்றும் சுற்றலாத்துறை அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறவேண்டிய மிகுதிகளாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக செயல்படுவதற்காக நிதி முகாமைத்துவபிரிவில் கனிஷ்ட முகாமையாளர் இருவரிடம் பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளதுடன் | பெறவேண்டிய மிகுதி மற்றும் செலுத்த வேண்டிய மிகுதி இடையிலான வேறுப்பாட்டை இனங்கண்டு அவைகளை திருத்தப்படவேண்டியமை |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்த மிகுதிகளும் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாக மேற்படி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மிகுதிக்களுக்கிடையில் ரூபா 2,202,364க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | தேவையான கருமங்களை செய்வதற்கு நடவடிக்கைளடுக்கப்படும். | . |

### 1.5.3 கணக்காய்வுக்கான எழுத்து மூல சான்று இல்லாமை

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| **விடயம்** | **பணம். ரூபா** | **வுழங்கப்படாத கணக்காய்வு சான்று** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **(அ)** முதலீடு | 55,530,266 | முதலீட்டு சான்றிதழ் அல்லது ஏனைய எழுத்து மூல சான்று | விடயம் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டு அந்த அறிக்கையின் படி தேவையான பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு குழுவானது நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது | உறுதிப்படுத்தவதற்கான சான்று கணக்காய்வுக்க சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| **(ஆ)** பெற வேண்டிய மிகுதி | 265,143,519 | மிகுதியினை உறுதிப்படுத்தும் கடிதம் | வியாபார கடன்பட்டோர் மற்றும் பாசிகுடா நீர் பாவணை கடன் பட்டோரின் மிகுதிகளை உறுதிப் படுத்துமாறு அதிகாரசபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மிகுதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** முற்பணம் | 20,072,827 | மிகுதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | முற்பணம் செலுத்தப்பட்ட பிரிவுகளுக்கு அந்த திட்டங்களை பற்றிய தற்போதைய நிலையை விசாரித்து நிதிப்பிரிவினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அப்பதில்களுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட கணக்குகளை நாளதுவரை படுத்தப்பட்டுள்ளது. | மிகுதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியமை. |

## 1.6 பெற வேண்டிய கணக்குகள்

----------------------------------

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------ | ------------------------- | ---------------------- |
| **(அ)** | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றக்களின் படி வியாபாரமற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்டுள்ள ரூபா 8,385,871 க்கானமிகுதியில் 05 வருடம் கடந்துள்ள பெறப்பட வேண்டியமிகுதி ரூபா 3,043,936 ஆகும் | அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய விடயம் சம்பந்தமாக செயற்படுவதற்காக நிதிமுகாமைத்தவ பிரிவில் கனிஷ்ட முகாமையாளர் இருவரிடம் பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இப்போதைக்கும் இம்மிகுதிகள் சம்பந்தமானகொடுக்கல் வாங்கல் பகுப்பாய்வுவிடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பெறுபேறுகளுக்கமைவாகவும் நிதிப்பிரமாணங்களுக்கமைவாகவும் தேவையானநடவடிக்கைளடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தினை துரிதமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய ரூபா 9,083,732 க்கான வைப்புமிகுதியில் 1990 வருடம் முதல் 2007 வருடம் வரையிலான காலப்பகுதியினுள் ரூபா 6,806,104 க்கானமிகுதியும் 2012 வருடம் முதல் 2016 வருடம் வரையிலான காலப்பகுதியில் ரூபா 2,171,500 க்கானமிகுதிகள் உட்பட்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்கள் ஆகியவற்றடன் இனங்காமை

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளின் கவனம். | இனங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 2005, 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தில் IV ஆம் அத்தியாய 26(1) உப பிரிவு | சட்ட ஏற்பாடுகளுக்கமைய பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தினுள் செய்யக்கூடிய சுற்றலாத்துறை சம்பந்தமான செயற்பாடுகள் வியாபார ஏனைய விடயங்கள் சம்பந்தப்பட்ட உத்தரவுகள் | துற்போது இது சம்பந்தமான கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

பிரப்பிக்கப்படவில்லை

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| **i.** | நிதிப் பிரமாணம்169 (2) | 2003 வருடம் முதல் 2017 வருடம் வரை மறுக்கப்பட்ட 22 காசோலைகளின் பெறுமதியான ரூபா 650,194 சம்பந்தமாக பிரமாணத்திற்கமைய செயற் பட்டிருக்கவில்லை . | கெக்கிறாவை வாடி வீட்டிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 64,973 வங்கி கணக்கில் இடப்பட்டுள்ளது அறவிட முடியாத மறுக்கப்பட்ட காசோலைகள் பற்றிய தற்போதைய நிலை பற்றி தகவல்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டவுட ன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் படி செயற்பட வேண்டியமை. |
| **ii.** | நிதிப்பிரமாணம் 396 | 2010 வருடம் முதல் 2017 வருடம் வரையிலான காலவீச்சில் கொடுக்கப்பட்ட ஆனால் கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 4,153,904 க்கானகாசோலைகள் சம்பந்தமாக இந்தபிரமாணங்களுக் குஅமையசெயற்பட்டி ருக்கவில்லை . | நிதி முகாமைத்துவ பிரிவில் கனிஷ்ட முகாமையாளர் இருவர் இம்மிகுதிகள் சம்பந்ப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பகுப்பாய்வு செய்து வருகின்றனர். அதன் பெறுபேறுக்கு அமைய மற்றும் பிரமாணங்களின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணப்படி செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **iii.** | . நிதிப் பிரமாணம்757 | ரூபா1,880,781 பெறுமதியான நூலகபுத்தகங்கள் சம்பந்தமாக ஆய்வு நடத்தப்படவில்லை. | நூலகப் புத்தகங்கள் சுற்றுலாத்துறை மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தினால் பராமரிக்கப்படுவதனால் அந் நிறுவனங்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களுக்க மைய செயற்பட வேண்டியமை. |
| **(இ)** | 1978 திசெம்பர் 19ஆந் திகதிய 842 இலக்கதிறைசேரிசுற்றறிக் கைமற்றும் நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் நாளாது வரைப்படுத்தப்பட்டு பேணப் பட்டிருக்கவில்லை | நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் பேணப்படாது இருந்தபோதிலும் லெஜரில் பேணப்படும் ஒவ்வொரு நிலையான சொத்துக்களின் வகைகளுக்கு சம்பந்தமன கொடுக்கல்வாங்கல் அடிப்படையில் சொத்துக்களின் பாவணை உபகரணங்களுக்கான தேய்மானம் கணக்கிலிடப்பட்டுள்ளது | சுற்றறிக்கை மற்றம் நிதிப்பிரமாணத்திற்கு அமைய செயல்பட வேண்டியமை. |
| **(ஈ)** | 2002 நொவெம்பர் 28 திகதிய IAI/02/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணணி எதிரிப்பாகங்கள் மற்றம் மென் பொருட்களுக்கான நிலையான சொத்துக்களுக்கான பத்திரம் பேணப்படாமை | திறைசேரி சுற்றிக்கைப்படி அப்பத்திரத்தை தாயரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப்படி சொத்துக்களை ஆவணப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கைபெறுபேறுகள் ரூபா 435,904,424 மேலதிகமாக இருந்ததுடன் அதற்கமைய முன்னைய வருட சீராக்கல் ரூபா 45,311,569 வாக ஆக்கப்பட்டதன் பின் சென்ற ஆண்டின் மிகை ரூபா 443,426,126 ஆயிற்று. அதன்படி நிதிப்பெறுபேறுகளில் ரூபா 7,521,702 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. கப்பல் பிரயாண வரி வருமானம் ரூபா 62,459,828 ஆகவும் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரிவருமானம் ரூபா 45,973,857 ஆகவும் அதிகரித்தபோதும் வியாபாரசெலவினம் ரூபா 87,266,356 வாக அதிகரித்தல் மற்றும் அனுமதிப்பத்திரக்கட்டண வருமானம் ரூபா 57,628,678 ஆக குறைந்தமை மேற்படி பின்னடைவுக்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. நடவடிக்கைமீளாய்வு

### 3.1 முகாமைத்துவவினைத் திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வருடாந்த செயற் பணித்திட்டத்திற்கமைவாக எதிர்ப்பார்க்கப்பட்ட 178 செயற்பணிகள் செயல்படுத்துவதற்கு ரூபா மில்லியன் 2,446.90 க்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் ரூபாமில்லியன் 244.33 செலவிடப்பட்டு செயற்பணி 72 மாத்திரம் அமுல் நடத்தப்பட்டிருந்தன. | விடையளிக்கப்படவில்லை | செயற்பணித்திட்டத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு செயற்படவேண்டியமை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுசமர்ப்பித்தல்

கீழேயுள்ள அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 இலக்க அரசாங்க வியாபார சுற்றறிக்கை 6.5.1 பந்தியின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்று சமர்பிக்க வேண்டியிருந்த போதும் 2018 வருடத்திற்கான நிதிக்கூற்று 2019 ஏப்ரல் 01 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 வருடத்திற்கான இரண்டாவது பதவியினர்க் கூட்டம் 2019 மார்ச் 19 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன் அத்தினத்தன்று 2018 வருடத்திற்கான நிதிக்கூற்று அங்கீகரிக்கப்பட்டது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்று கணக்காய்வுக்காக 2019 ஏப்ரல் 01 திகதி ஒப்படைக்கப்பட்டது. | சுற்றறிக்கை விதிகளின் படி உரியகாலத்தினுள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க வேண்டியமை. |